முதல் இடைப் பருவத் தேர்வு - மார்ச் 2021

பன்னிரெண்டாம் வகுப்பு பதிவு எண் | | | | | | | |

நேரம்:1.30 மணி பொதுத்தமிழ் மதிப்பெண்கள்:50

I. பலவுள் தெரிக. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 8×1=8

1) 'செம்பரிதி மலைமேட்டில்' எனத் தொடங்கும் சிற்பியின் பாடல் இடம் பெற்ற கவிதைத் தொகுப்பு நூல்.

அ) தமிழ்ப்பூ ஆ) அல்லிப்பூ

இ) இரவுப்பூ ஈ) நிலவுப்பூ

2) உன்னை எதிர்கொள்பவர்கள் எக்குணம் உடையவராக இருப்பினும் அவர்களை வரவேற்பது.

அ) விருந்தோம்பல் ஆ) அற்பத்தனம்

இ) வெறுத்தல் ஈ) கரிமித்தனம்

3) 'குடும்பம்' என்னும் அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை

அ) கணவன் ஆ) திருமணம்

இ) தங்குமிடம் ஈ) குழந்தை

4) பொருத்துக:

அ) தமிழ் அழகியல் - 1) பரலி சு. நெல்லையப்பர்

ஆ) நிலவுப்பூ - 2) தி. சு. நடராசன்

இ) கிடை - 3) சிற்பி பாலசுப்பிரமணியம்

ஈ) உய்யும் வழி - 4) கி. ராஜநாராயணன்

அ) 4, 3, 2, 1 ஆ) 1, 4, 2, 3 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1

5) மொழியின் அடிப்படைப் பண்புகள்

அ) எழுவாய் பயனிலை ஆ) திணை, பால், எண், இடம்

இ) தன்மை, முன்னிலை, படர்க்கை ஈ) உயர்திணை, அஃறிணை

6) 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதி அமைந்த சொற்றொடர்

அ) வானமெல்லாம் ஆ) ஆங்கவற்றுள் இ) வெங்கதிர் ஈ) தனியாழி

7) தமிழ்நாட்டில் வீதிதோறும் ________ மலிக என்று பாரதியார் எதனைக் கூறுகிறார்.

அ) திரையரங்குகள் ஆ) மருத்துவமனை

இ) தமிழ்ப்பள்ளிக் கூடங்கள் ஈ) விளையாட்டரங்கம்

8) 'பூமணி சிறுகதைகள்' என்னும் தொகுப்பில் அமைந்துள்ள சிறுகதை

அ) முதல்கல் ஆ) உரிமைத்தாகம்

இ) தலைக்குளம். ஈ) ஒரு கிராமத்து நதி

II. எவையேனும் மூன்றனுக்கு மட்டும் குறித்த விடை தருக. 3×2=6

9) தமிழில் எழுதும் போது ஏற்படும் பிழைகளை எத்தகை வகைப்பாட்டில் விளக்கலாம்? பட்டியலிடுக.

10) உறுப்பிலக்கணம் தருக. (ஏதேனும் ஒன்றனுக்கு)
பொலிந்தான், கலங்கி

11) புணர்ச்சி விதி தருக. (ஏதேனும் ஒன்று)
அருங்கானம், தமிழருவி

12) பிறமொழிச் சொற்களுக்கு கலைச் சொல் தருக.
FICTION, MANUSCRIPT

III. அ) குறுவினா (எவையேனும் ஒன்றனுக்கு மட்டும்) 1×2=2

13) கவிஞர் சிற்பி எவற்றை வியந்துபாட தமிழின் துணை வேண்டுமென்கிறார்.

14) மறக்கக் கூடாதது. மறக்கக் கூடியது எவற்றை?

ஆ) குறுவினா (எவையேனும் ஒன்றனுக்கு மட்டும்) 1×2=2

15) மொழியின் இயல்பு வழக்குக்களைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை எவை?

16) புக்கில், தன்மனை சிறுகுறிப்பு தருக?

IV. சிறுவினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும்) 2×4=8

17) பொருள் வேற்றுமை அணியை எடுத்துக் காட்டுடன் விளக்குக.

(அல்லது)

'வருபவர் எவராயினும் நன்றி செலுத்து' இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

18) தாயும் தந்தையும் பணிக்கு செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீவிர் குடும்பத்திற்குச் செய்யும் உதவிகள் யாவை?

19) தமிழ் எழுத்துக்கள் எத்தனை?அவற்றை வகைப்படுத்துக

V. நெடுவினா (அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்) 3×6=18

20) கவிஞர் சிற்பி 'இளந்தமிழே' வாயிலாக கூறுகின்ற கருத்துக்களைத் தொகுத்தெழுதுக?

(அல்லது)

ஜலாலுத்தின் ரூமி நல்லவற்றைக் கற்றுக் கொள்ளும் பண்பாடு எவ்வாறு வளர வேண்டுமென்கிறார். விளக்குக?

21) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக?

(அல்லது)

குடும்பம் எனும் சிறிய அமைப்பிலிருந்து மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது. எவ்வாறு? விளக்குக?

22) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப் பற்று ஆகியவற்றை விவரிக்க.

(அல்லது)

'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் ............. கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

****************